

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, தாராபுரம் மேற்கு ஒன்றியம், பொட்டிக்காம்பாளையம் மற்றும் பொன்னாபுரம் ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிகுழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் மாவட்ட துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தொகுதி குளத்தூர் பகுதி காமராஜர் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்திய மாபெரும் மின்னொளி கபடி போட்டி நடைபெற்றது. போட்டியில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றி கோப்பையும் பரிசினையும் வழங்கினார். விழாவில் விளாத்திகுளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர். ஆனந்தசேகரன், ராஜாக்கண்ணு, சின்னமாரிமுத்து , ராமசுப்பு, இம்மானுவேல் மாவட்ட அணி சென்றாய பெருமாள், தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் கலைச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ‘நீட்’ தேர்வு தகுதி மதிப்பெண் கடுமையாக உயர்ந்ததால்

# மாணவர்களின் மருத்துவக் கனவுக்கு பெரும் பின்னடைவு!

சென்னை, ஜூலை 20-

தேசிய அளவில் நீட் தேர்வு தகுதி மதிப்பெண்கள் கடுமையாக உயர்ந்ததால் கிராமப்புற மாணவர்களின் மருத்துவ சேர்க்கை வாய்ப்புகளுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மருத்துவப் படிப்புக்கான இளநிலை நீட் தேர்வு தகுதி கட்-ஆஃப் மதிப்பெண்கள் இதுவரை இல்லாத வகையில் இந்த ஆண்டு வரலாறு காணாத உயர்வைச் சந்தித்துள்ளன. இந்த திடீர் மதிப்பெண் உயர்வு காரணமாக, மருத்துவக் கனவோடு இருக்கும் கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களின் சேர்க்கை வாய்ப்புகளை இழந்து மனதளவில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

இந்த ஆண்டு வெளியாகியுள்ள தகுதி மதிப்பெண் விவரங்கள் பிரிவுகள் வாரியாக பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, பொதுப்பிரிவு மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர் சாதி ஏழைகளுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் இந்த ஆண்டு 213 ஆக உயர்ந்துள் உள்ளது. நீட் தேர்வு எழுதிய இந்த பிரிவில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் கட்-ஆஃப் மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

அதே நேரத்தில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (ஓபிசி), பட்டியலினத்தவர் எஸ்சி) மற்றும் பழங்குடியின (எஸ்டி) பிரிவு மாணவர்களுக்கான தகுதி கட் ஆப் மதிப்பெண்கள் கடந்த ஆண்டில் 113 ஆக இருந்த நிலையில், இந்த ஆண்டு 177 ஆக அதிகரித்துள்ளது.

ஒரே ஆண்டில் இந்த பின்தங்கிய பிரிவு மாணவர்களுக்கான கட்-ஆஃப் மதிப்பெண் 64 வரை உயர்ந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த திடீர் உயர்வு. போதிய பயிற்சி வசதிகள் இல்லாத கிராமப்புற மாணவர்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். மேலும், இந்த ஆண்டு தேர்வு எழுதியவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை கணிசமாக அதிகரித்த போதிலும், கடுமையான கட்-ஆஃப் உயர்வால் தகுதி பெற்றவர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 1.11 லட்சம் என்ற அளவில் குறைந்துள்ளது.

தமிழகத்தின் நில வரத்தைப் பொறுத்தவரை, பல்வேறு குளறுபடி களுக்கு மத்தியில் நீட் மறுதேர்வு எழுதத் தகுதியான மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், மறுதேர்வு எழுத விண்ணப்பித்தவர்களில் 23 சதவீதம் பேர் இந்தத் தேர்வை எழுத முன்வரவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இத்தகைய தேசிய அளவிலான கட்-ஆஃப் மதிப்பெண்களின் அசுர வளர்ச்சி காரணமாக, நடப்பு கல்வியாண்டில் தமிழ் நாட்டில் மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான மாநில கட்-ஆஃப் மதிப்பெண்களும் கணிசமாக உயரக் கூடும். அதன்படி, தமிழ கத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல் லூரிகளில் இடங்களைப் பெறுவதற்கான மாநில கட்- ஆஃப் மதிப்பெண் மேலும் 40 மதிப்பெண்கள் வரை உயரக் கூடும் என்று மருத்துவக் கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## “கடவுளுக்கே பாதுகாப்பு இல்லாத த.வெ.க. ஆட்சி”!

# திருத்தணி அருகே அம்மன் கழுத்திலிருந்த 10 சவரன் தாலி பட்டப்பகலில் கொள்ளை!

### சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிட்டதாக பொதுமக்கள் வேதனை!

திருவள்ளூர், ஜூலை 20-

திருவள்ளூர்மாவட்டம் திருத்தணி அருகே உள்ள ஆர்.கே.பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட அய்யனேரி கிராமத்தில் அமைந்துள்ள பழமையான திரௌபதி அம்மன் திருக்கோயிலில், அம்மன் சிலையின் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்தசுமார்10சவரன் தங்கத் தாலியை மர்ம நபர்கள் பட்டப்பகலில் திருடிச் சென்ற சம்பவம் பக்தர்கள் மற்றும்பொதுமக்கள்மத்தியில் கடும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அய்யனேரி கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இக்கிராமத்தின் முக்கிய ஆன்மிகத் தலமாக விளங்கும் திரௌபதி அம்மன் கோயிலில் நாளை நடைபெறவுள்ளதீமிதிதிருவிழாவையொட்டி, அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களின் சிலைகள் பக்தர்கள் தரிசிப்பதற்காக கோயில்வளாகத்தில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன.

பக்தர்கள் வழிபாடு செய்து சென்ற பின்னர், சிறிதுநேரம்கழித்துகோயில் நிர்வாகிகள் வழக்கமான பணிக்காக சன்னதிக்குள் சென்றபோது, அம்மன் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த 10 சவரன் தங்கத் தாலிகாணாமல்போனதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக ஆர்.கே.பேட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார், கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாய் உதவியுடன் தீவிர விசாரணை மேற்கொண்டனர். கோயில் வளாகத்தில் இருந்த தடயங்களை சேகரித்து, அருகிலுள்ள பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களின்பதிவுகளையும் ஆய்வு செய்து வருகின்றனர். தீமிதிதிருவிழாவுக்கு முந்தைய நாளே இந்த துணிச்சலானதிருட்டுநடந்திருப்பதுபக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச்சம்பவம்தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள போலீசார், விசாரணைநடத்திவருகிறார்கள்

இந்தச் சம்பவத்தை அடுத்து, “த.வெ.க. ஆட்சியில் மக்கள் மட்டுமல்ல, கோயிலில்உள்ளகடவுளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகிவிட்டதா?”என்றகேள்வியை பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் எழுப்புவதாக குற்றம்சாட்டுகின்றனர்.பக்தர்களின் நம்பிக்கையின் சின்னமாக விளங்கும் ஆலயங்களில்கூட பாதுகாப்பு உறுதிசெய்யமுடியாதஅளவுக்குசட்டம்-ஒழுங்குசீர்குலைந்துள்ளதாகவும், குற்றவாளிகளுக்கு அச்சமே இல்லாத சூழல் நிலவுவதாகவும் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

மேலும், இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து,கோயில்களின்பாதுகாப்பை பலப்படுத்த அரசு நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும், இல்லையெனில் இதுபோன்றசம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறும் அபாயம் இருப்பதாகவும் வலியுறுத்தியுள்ளனர்.

# காரைக்குடி திராவிடப் பெரும் புலவர் ஆ.பழநி நூல்கள் நாட்டுடைமை! ‘திராவிட மாடல்’ முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை!

### கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!






காரைக்குடி, ஜூலை20-

காரைக்குடி மண்ணின் மைந்தரும், மூத்த தமிழறிஞருமான திராவிடப் பெரும் புலவர் ஆ.பழநி அவர்கள் எழுதிய 18 நூல்களை கடந்த தி.மு.க. ஆட்சியில் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாட்டுடைமை ஆக்கி அன்னாரின் குடும்பத்தாருக்கு ரூ 10 இலட்சம் பரிவுத் தொகையினையும் வழங்கினார்கள்.

அதற்காக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்களுக்கும் நன்றி பாராட்டும் நிகழ்ச்சி காரைக்குடி கிருஷ்ணா கார்டன் அரங்கில்

சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்விற்கு தி.மு.க. மாநில இலக்கிய அணி புரவலரும் மேனாள் அமைச்சருமான மு.தென்னவன் தலைமை தாங்கினார்.

புலவர் ஆ.பழநி அறக்கட்டளை தலைவரும், புலவரின் மரபுரிமை வாரிசுமான சுப.அழகுபாண்டியன் வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார்.

காரைக்குடி மாநகர துணை மேயரும், மாநகர தி.மு.க. செயலாளருமான நா.குணசேகரன், வல்லநாடு கல்விக்குழும இயக்குனர், பொறியாளர் சா.நடராசன், புலவரின் பேரன் தொழிலதிபர் கண்டனூர் நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலைக்கோயில் நாட்டியப் பள்ளி இயக்குனர் கலைமாமணி முனைவர் மா.சுப. சரளா, திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார், தி.மு.க. மாநில இலக்கிய அணி செயலாளர் கவிச்சுடர் இரா.சு. கவிதைப் பித்தன் ஆகியோர் பாராட்டரங்கில் உரையாற்றினார்கள்.

திராவிட இயக்க மூத்த முன்னோடிகள் அண்ணா தமிழ்க் கழக செயலாளர் அ.கதிர்வேல், தி.மு.க. மேனாள் நகர்மன்ற உறுப்பினர் 90 வயது

எட்டிய சொக்கநாதன், திருக்குறள் மெய்யுரை எழுதியவரும், மேனாள் நகர் மன்ற உறுப்பினருமான குறள் மிகு சுப.பரமசிவம், தி.மு.கழக தலைமை கழக சொற்பொழிவாளரும், மதுரை திருக்குறள் மற்ற தலைவருமான மு.க. இராமகிருஷ்ணன் ஆகியோருக்கு சிறப்பு செய்யப் பட்டது.

அறக்கட்டளை செயலாளர் தி.என்னாரெசு பிராட்லா இணைப்புரை வழங்கிட, அறக்கட்டளை பொருளாளர் சிவ. கிருஷ்ண பிரசாத் நன்றியுரையாற்றினார்.

இந்த நிகழ்வில் திராவிடர் கழக மாவட்ட துணைத் தலைவர் கொ.மணி வண்ணன், மாவட்ட துணை செயலாளர் இ.ப.பழனி வேலு, மாவட்ட ப.க. செயலாளர் ந.செல்வராசன்,

தேவகோட்டை நகர தலைவர் வீர.முருகப்பன், பகுத்தறிவாளர் கழக பொறுப்பாளர் அ.அரவரசன், தேவகோட்டை நகர அமைப்பாளர் நா.பாரதி தாசன், பொதுக்குழு உறுப்பினர்கள் தி.செயலெட்சுமி, பலவான்குடி ஆ.சுப்பையா, கல்லல் ஒன்றிய செயலாளர் கொரட்டி வீ.பாலு,

சூரக்குடி மணிவண்ணன், அமராவதி புதூர் சண்முகநாதன், பேராசிரியர் நெல்லை பாபு, துரை.குமணன்,

தி.மு.கழக மாவட்ட பொருளாளர் சுப.துரைராசு, மாவட்ட பிரதிநிதி அ.சேவியர், நகர தி.மு.க. அவைத்தலைவர் சன்.சுப்பையா,நகர மேனாள் இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கே.பி. முனீஸ்வரன் நகர்மன்ற உறுப்பினர் கலா காசிநாதன், மேனாள் நகர் மன்ற உறுப்பினர்கள்

இராம.அன்பழகன், மெ.பழநியப்பன், தி.மு. கழக வட்டச் செயலாளர் இரா.இராதாகிருஷ்ணன்,

காரைக்குடி தொழில் வணிகக்கழக

தலைவர் கண்ணப்பன், பொருளாளர் சையது, காங்கிரசு கமிட்டி நகர தலைவர் மெ.சண்முகதாஸ், குழந்தைகள் நல மருத்துவர் து.கார்த்திகேயன்,

தமிழ் இன உணர்வாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள்,

நகரின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

புலவர் ஆ.பழநி குடும்பத்தினர் அனைவருக்கும் சிற்றுண்டி,தேநீர் வழங்கி வரவேற்றனர்.

திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேரா. சுப.வீ, இராமசாமி தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் தெ.முருகசாமி ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச்செய்தி படிக்கப்பட்டு நன்றி தெரிவித்தும், புலவர் ஆ.பழநி அவர்களின் தனிச் சிறப்புகள் அடங்கிய ஒரு அறிக்கையும், காரைக்குடி அண்ணா தமிழ்க் கழகம் வெளியிட்ட நன்றி கடிதமும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.



திருப்பூர் மாநகராட்சி 36வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழுத் தலைவர் பெ.திவாகரன் ஏற்பாட்டில் கலை – கலாச்சார பாரம்பரிய அணி மாவட்டப் பொறுப்பாளர்கள் தமிழரசன், விக்கி, இளவரசன் மற்றும் மோகன் உள்பட 70க்கும் மேற்பட்ட த.வெ.க.வினர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாநகரச் செயலாளர் டிகேடி மு.நாகராஜன், மாவட்ட துணை செயலாளர் டிஜிட்டல் எஸ்.சேகர், பகுதி கழக பொறுப்பாளர்கள் – மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில்குமார், க.ஈஸ்வரமூர்த்தி, தம்பி ப.குமாரசாமி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார், 36வது வார்டு பொறுப்பாளர்கள் பி.எஸ்.பாண்டியன், தினேஷ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்டம், சங்கனூர் பகுதி வார்டு எண் 18ல் நடைபெற்ற கழக செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் சிறப்புரையாற்றினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் குட்டி ஜெயசந்திரன், மாநில சட்டத்துறை இணை செயலாளர் பி.ஆர்.அருள்மொழி, மாவட்ட துணை செயலாளர் கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆனந்த்குமார், வட்ட பொறுப்பாளர்கள் பூபாலன், கணேசன், பாலசுப்ரமணி, சுப்புராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.